குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-20)

(2) தகவல் கோரல்.

அ. உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் தள்ளுபடி குறித்து.

* திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்வேறு 41, 42 விதிகளின்கீழ் அறிவிப்பு கொடுத்தும் நீங்கள் அவைகளையெல்லாம் தள்ளுபடி செய்து அனுப்புகிறீர்களே, அது நியாயம் தானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Overruled பாயின்ட் ஆப் ஆர்டர் நிராகரிக்கப்பட்டது. உட்காருங்கள்.

ஆ. 'இந்தியா டுடே' பத்திரிகை மீது கொடுத்த உரிமைப் பிரச்சினை குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 'இண்டியா டுடே' பத்திரிகையின் மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்து, அதை நீங்கள் எழுதி அந்தப் பத்திரிகையிடமிருந்து தகவல் தெரிந்து முடிவு தெரிவிப்பதாகத் தெரிவித்திருந்தீர்கள். சட்டமன்றம் கூடி இத்தனை நாள் ஆகியும் உரிமைப் பிரச்சினையின் மீது தங்களுடைய முடிவு இதுவரையில் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். அந்த நோட்டீஸ் 'லாப்ஸ்' ஆகிவிட்டதா, இல்லையா என்று தெரியவில்லை. அதைப் பற்றி நீங்கள் என் கவனத்திற்கு இப்போதுதான் கொண்டு வந்தீர்கள். அது பற்றி நாளை மறுநாள் சொல்கிறேன்.

இ. அசெம்பிளி அலுவலர்களுக்குப் 'பாஸ்' வழங்குவது குறித்து.

திரு. ரா. உமாநாத் : கடந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அசெம்பிளி மெம்பர்சுக்கு பல வசதிகள் அனவுன்ஸ் பண்ணியபொழுது, ஒரு வாக்குறுதியை நிதியமைச்சர் கொடுத்தார். அசெம்பிளியைச் சார்ந்திருக்கக் கூடிய அலுவலர்களுக்கு இந்த செஷனுக்கு வருகிறபொழுது டிரான்ஸ்போர்ட் டுக்கு ஃப்ரி பாஸ் கொடுப்பதற்கு ஒரு அஷூரன்ஸ் கொடுக்கப்பட்டது.